## தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

## C.C. No. 75 / 2025

PW : 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சௌந்தர்ராஜன் | த / பெ. | | திரு. வீரப்பன் |
| கிராமம் | : | பாலையூர் நத்தம் | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் 18 ம் தேதி ....................... பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

18.06.2025

முதல் விசாரணை

நான் தற்போது மூவர்கோட்டை வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். 2017 ஆம் வருடம் நவம்பர் மாதம் எனது மாத ஊதியம் ரூ.10,396/- இரண்டுதடவை சம்பளம் பெற்றதாக கணக்கில் வரவு வைத்துள்ளார்கள். ரொக்கபுத்தகம் எண் 5 ல் 14.07.2017 முதல் 07.02.2018 வரை பக்கம் 195 ல் நவம்பர் மாதம் சம்பளம் கொடுத்ததாக பதிவு உள்ளது. மற்றும் பக்கம் 196 ல் டிசம்பர் மாதத்திற்கான சம்பளமும் கொடுக்கப்பட்டதாக பதிவு உள்ளது. இது **அசாஆ 8** ஆகும். ரொக்கபுத்தக எண் 6 ல் 08.02.2018 முதல் 29.12.2018 வரை பக்கம் 41 ல் நவம்பர், டிசம்பர் மாத சம்பளம் கொடுக்கப்பட்டதாக இருமுறை பதிவு உள்ளது. இது **அசாஆ 9** ஆகும். 81 விசாரணை அதிகாரி என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும்

விசாரணை அதிகாரியின் வாக்குமூலத்தில் உள்ளது எனது கையெழுத்துதான். இது **அசாஆ 10** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

என்னிடம் நீதிமன்றத்தில் தற்போது காட்டப்படும் எண் 55 என்று எண்ணுள்ள சம்பள வழங்கும் பதிவேட்டில் பக்கம் 30 ல் நவம்பர் 2017 க்கான மாத ஊதியம் ரூ.10,396/- நான் சம்பளம் பெற்றதாக முத்திரைவில்லை ஒட்டி கையெழுத்திட்டுள்ளேன். அதில் ஒருதடவை மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. நான் முதல்விசாரணையில் 2017 நவம்பர் மாதத்தில் இருமுறை சம்பளம் பெற்றதாக சொல்லப்பட்ட விவரம் தொடர்பாக 28 என்று எண்ணிடப்பட்டுள்ள ரொக்க புத்தக எண் 6 ல் 41 வது பக்கத்தில் (அசாஆ 9) இதை எழுதியது யார் என்ற குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். 27.03.2018 ல் பதிவுசெய்யப்பட்டதாக தேதியிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் உண்மையை மறைத்து இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.06.18 18:50:20 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 75 / 2025

PW : 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வேலாயுதம் | த / பெ. | | திரு. சரவணன் |
| கிராமம் | : | மூவர்கோட்டை | தாலுக்கா | : | நீடாமங்கலம் |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் 18 ம் தேதி ....................... பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

18.06.2025

முதல் விசாரணை

நான் தற்போது மூவர்கோட்டை கூட்டுறவு சங்கத்தின் தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கியில் 1995 ல் பணியில் சேர்ந்து 2015 ல் எழுத்தராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறேன். 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான சம்பளம் ரூ.10,290/- எனக்கு கொடுத்தார்கள் அதை நான் வாங்க மறுத்துவிட்டேன். அரசின் ஊதிய ஒப்பந்தபடி இது குறைவான சம்பளமாக உள்ளது என வாங்க மறுத்துவிட்டேன். பிரிவு 81 விசாரணை அறிக்கையின்படி சம்பளம் எனக்கு கொடுத்ததாக காண்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்தது. ரொக்க புத்தக எண் 1 29.09.2014 முதல் 30.05.2015 வரை பக்கம் 196 வரிசை எண் 2 ன் பதிவுகள் அது **அசாஆ 5** ஆகும். 81 விசாரணை அதிகாரிகள் என்னை விசாரித்தார்கள். நான் ஊதிய பட்டியலில் கையெழுத்து போடவில்லை. சம்பள வழங்கும் பதிவேடு 55 பக்கம் 1 வரிசை எண் 2 ல்

என்னுடைய கையெழுத்து இல்லை அது **அசாஆ 6** ஆகும். 81 விசாரணை அதிகாரி விசாரணையின் வாக்குமூலத்தில் உள்ளது எனது கையெழுத்துதான். வரிசை எண் 53 பக்கம் 89 மற்றும் 90 அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது **அசாஆ 7** ஆகும். பொருளாதார குற்றப்பிரிவு காவல்துறையினர் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்குவிசாரணை

நான் சம்பளம் பெறும்போது சம்பள பேரேட்டில் ஸ்டாம் ஒட்டி கையொப்பமிடுவேன் என்றால் சரிதான். சம்பளம் பெற மறுத்துவிட்டதாக நான் முதல்விசாரணை சொல்லியுள்ள நிலையில் எனது மேல்அதிகாரிகளுக்கு நான் எழுத்துபூர்வமான கடிதம் கொடுத்துள்ளேனா என்றால் வாய்மொழியாக தெரிவித்துள்ளேன். எழுத்துபூர்வமான கொடுக்கவில்லை. எதிரிமீது உள்ள காழ்புணர்ச்சியின் காரணமாக சம்பளம் வாங்க மறுத்துவிட்டேன் என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியுள்ள விவரங்களை 81 விசாரணை அதிகாரியின் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். வணிக பொருளாதார குற்றப்பிரிவு காவல்துறையினரிடம் இந்த தகவலை சொல்லியுள்ளேன். தற்போது அந்த சங்கத்தின் செயலாளராக நான்தான் பொறுப்பில் உள்ளேன் என்றால் சரிதான். எதிரி பணி ஓய்வுபெற்றபிறகு நான் சங்க செயலாளராக பொறுப்பிற்கு வந்தேன் என்றால் 3 செயலாளர்கள் பணிபுரிந்தபிறகு நான் தற்போது செயலாளராக பதவி ஏற்றுள்ளேன். எதிரி 31.03.2018 ல் பணி ஓய்வு பெற்றார். 81 விசாரணை அதிகாரி

என்னை 2019 ஆம் வருடம் விசாரித்தனர். நான் 81 விசாரணை அதிகாரியிடமும் தவறான தகவலை அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.06.18 18:53:37 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 75 / 2025

PW : 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராமசுப்பு | த / பெ. | | திரு. |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் 18 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

18.06.2025

முதல் விசாரணை

நான் தற்போது நாகப்பட்டிணம் சரக கூட்டுறவு சங்க துணை பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி சரக கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளராக பணிபுரிந்து வந்தபோது T539 மூவர்கோட்டை தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரிவு 81ன் கீழான விசாரணை அறிக்கையில் நடைபெற்று நிலுவையிலிருந்த கோப்பின் அடிப்படையில் குற்றபுகார் ஒன்றினை வணிகவியல் குற்றபுலனாய்வுத்துறை சென்னைக்கு புகார் செய்திருந்தேன். மேற்படி விசாரணை திருவாரூர் மாவட்ட கூட்டுறவு தணிக்கை உதவிஇயக்குநர் அவர்களின் நேர்முக கடிதம் ந.க. 2595/2017 நாள் 26.12.2017 அது **அசாஆ 1** ஆகும் அதன்படி நீடாமங்கலம் கூட்டுறவு சார்பதிவாளர் மற்றும் கள அலுவலர்

22.05.2018 மற்றும் 23.08.2018 ல் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.2407/2015 -2016 நாள் 10.09.2015 அது **அசாஆ 2** ஆகும் அதன்படியும் எனது முன்னவரால் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81 ன் கீழ் ந.க.1607/2018 நாள் 01.10.2015 அது **அசாஆ 3** அதன்படி ஆணையிடப்பட்டு திரு.இளங்குமரன், கூட்டுறவு சார்பதிவாளர் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு அவரால் சமர்ப்பிக்கப்பட்டவிசாரணை அறிக்கையின் அடிப்படையில் நிலுவையிலிருந்த கோப்புகள் என்னால் பரிசீலிக்கப்பட்டு 22.06.2021 ல் கோப்புகள் 2641/2019 சட்டப்பணிகள் மூலம் இந்த புகாரை தாக்கல் செய்தேன். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அந்த **புகார் அசாஆ 4** ஆகும். மேற்படி புகாரில் விசாரணை அலுவலர் தெரிவித்த மூவர்கோட்டை தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கியின் செயலாளர் பொறுப்பு வகித்த எழுத்தர் திரு.மணிவேல் ரூபாய் 8,02,585/- கையாடல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் என்னால் புகார் தாக்கல் செய்யப்பட்டது. காவல்துறையினர் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்குவிசாரணை

இந்த வழக்கில் கூட்டுறவு சங்க சட்டப்பிரிவு 81 ன் கீழான விசாரணைக்கு உத்தரவிட்ட அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 81 ன் கீழான விசாரணைக்கு உத்தரவிட்ட அதிகாரியின் பெயர் பாத்திமா சுல்தானா என்பவர் ஆகும். பொதுவாக 81ன் கீழான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு கூட்டுறவு சங்க பதிவாளருக்கு மட்டுமே சட்டம் அனுமதி அளித்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. கூட்டுறவு சங்க சட்ட விதிகளின்படி பதிவாளருக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்றும் அதை மாற்றி தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 81

ன்கீழான விசாரணைக்கு உத்தரவிடும்போது அனுமதிக்கப்பட்ட கால அளவு 3 மாதம் ஆகும். 3 மாத காலத்திற்குள் விசாரணை முடிக்கப்படவில்லை என்றால் மேலும் 3 மாத காலம் அவகாசம் அளிக்கப்படும் என்றால் சரிதான். அப்போதும் விசாரணை முடியவில்லை என்றால் மேலும் 3 மாத காலம் அவகாசம் அளிக்கப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கில் இரண்டுமுறை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. 81 ன் கீழான விசாரணைக்கு அனுமதிக்கப்பட்ட அதிகாரியின் பெயர் திரு.ஜெ.இளங்குமரன், கூட்டுறவு சார்பதிவாளர். உத்தரவிடப்பட்ட நாள் 01.10.2018 ஆகும். அந்த உத்தரவினை அவர் எந்த தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தினார் என்றால் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்துதான் நடைமுறைபடுத்தவேண்டும் என்பது சட்டவிதியாகும். விசாரணை அதிகாரி அந்த தேதியில்தான் விசாரணை ஆரம்பித்தாரா என்பது பற்றி விசாரணை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் விசாரணையை முடித்தார் என்றால் 27.06.2019 ல் முடித்தார். இந்த விசாரணை அறிக்கையானது என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த உத்தரவு மூவர்கோட்டை தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் முறைகேடுகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவுபடி எந்த காலத்திலிருந்து எந்த காலம்வரை நடந்த முறைகேடுகளை விசாரிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் 01.04.2015 லிருந்து 30.09.2018 வரையான காலகட்டத்தில் நடந்த முறைகேடுகளை பற்றி விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது. இந்த விசாரணையானது தனிப்பட்ட நபர்களின் புகார்மீதான விசாரணை அல்ல என்றால் சரிதான். ஆண்டுதணிக்கையின் அடிப்படையில் புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் இந்த விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதா என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. இந்த சங்கத்தின் ஆண்டறிக்கையின் வாயிலாக எந்த ஒரு குற்றசெயலும்

நடந்ததாக எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் சரிதான். 81 விசாரணை அதிகாரி கொடுக்கப்பட்ட அறிக்கையை பரிசீலனை செய்துதான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட தேதி 05.07.2019 ஆகும். புகார் கொடுக்கப்பட்ட தேதி 22.06.2021 ஆகும். இந்த 2 வருட காலம் காலதாமதமாகதான் இந்த புகார் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது பணியில் இருந்த அதிகாரி பாத்திமா சுல்தானா என்பவரா என்றால் எனக்கு நினைவில்லை. எனக்கு முன்பாக பணியில் இருந்த அதிகாரி திரு. ஜெயமணி என்பவர் ஆவார். 2 வருடகாலம் காலதாமதமாக புகார் அனுப்பப்பட்டதற்கு எந்த ஒரு காரணமும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சங்கத்தில் 81ன் கீழான விசாரணை அறிக்கையின் படி ரூபாய் 8,02,585/- கையாடல் செய்துள்ளதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் மேற்படி தொகையை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். சாதாரணமாக ஒரு கூட்டுறவு சங்கத்தில் 3 மாதகாலத்திற்கு ஒரு முறை தணிக்கை செய்வது வழக்கம் என்றால் சரிதான். இந்த கூட்டுறவு சங்கத்திற்கு அதுபோல 3 மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு நடைபெற்றது குறித்து ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் மன்னார்குடி சரகத்தில் கூட்டுறவு துணை பதிவாளராக இருந்தது 01.06.2020 முதல் 14.03.2024 வரை என்றால் சரிதான். துணை பதிவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு திடீர் ஆய்வு மேற்கொள்வது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு திடீர் ஆய்வுக்கு செல்லும்போது பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கையொப்பமிட்டு வரவேண்டும் என்றால் சரிதான். அதுபோல இந்த சங்கத்திற்கு ஆய்வு மேற்கொண்டு எனக்கு முந்தைய அதிகாரிகள் பார்வையிட்டு ஏதேனும் குறிப்புகள் எழுதியிருந்தார்களா என

பார்வையிட்டேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் குற்றபுகாரை நடவடிக்கை எடுக்க அனுப்புவதற்கு முன்பாக பதிவேடுகளை ஆய்வு செய்திருக்கவேண்டும் என்றால் தேவையில்லை. 81 விசாரணை அதிகாரி தொடர்புடைய சங்கத்தின் ஆவணங்களை கைப்பற்றி அவர் பொறுப்பில் வைத்துக்கொண்டு விசாரணை முடிந்தவுடன் விசாரணை அறிக்கையுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை துணை பதிவாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும் என்றால் சரிதான். அதன்படி இந்த வழக்கில் தொடர்புடைய ஆவணங்கள் பதிவேடுகள் அனைத்தும் என்னுடைய அலுவலகத்தில்தான் இருந்தது என்றால் சரிதான். 81 அறிக்கை சமர்ப்பிக்கும்போது அதை பெற்றுக்கொண்டு இந்த தேதியில் பெற்றுக்கொள்ளப்பட்டது என முத்திரை வழங்கவேண்டும் என்றால் சரிதான். அதுபோல இந்த வழக்கில் 81 விசாரணை அறிக்கையில் அதுபோன்று முத்திரை போடப்பட்டு தேதி குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. அவ்வாறு முத்திரையிடப்படாமலும் பெறப்பட்ட தேதி குறிப்பிடப்படாமலும் இருந்தால் அந்த விசாரணை அறிக்கை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 81 ன் கீழான விசாரணை அறிக்கை பெறப்பட்டதற்கான தேதி மற்றும் அலுவலக முத்திரை இல்லை என்றால் சரிதான். விசாரணைக்கு உத்தரவிடப்பட்ட குறிப்பிட்ட காலகெடுவிற்குள் விசாரணை முடித்திருக்கவேண்டும், அவ்வாறு காலம் தாழ்த்தி சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் அது செல்லத்தக்க அறிக்கை இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்தவரை எதிரி மீது எந்தவித குற்றஈர்ப்பும் இல்லாததால் வழக்கு தொடுக்க தகுதியற்ற அறிக்கை என்று ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தது என்றும், எங்கள் வசம் இருந்த ஆவணங்களை

வைத்துக்கொண்டு அவைகளை முறையாக ஆய்வுசெய்யாமல் எதிரிமீது குற்றஈர்ப்பு வரும் வகையில் பின்னிட்டு கால அவகாசமாக தயார் செய்து எதிரிக்கு எதிராக அனுப்பப்பட்ட புகார் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் 2 வருட காலதாமதத்திற்கான விளக்கம் எதுவும் என்னால் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி எப்போது பணி ஓய்வு பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் எதிரிக்கு எதிராக பதிவுசெய்யப்பட்ட பொய்வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கு தொடர்புடைய கூட்டுறவு சங்கத்தில் எத்தனை பேர் பணியில் இருந்தார் என்றால் தெரியாது. அதுபோல யார் யார் மேல் குற்றஈர்ப்பு இருந்தது என்பது பற்றி நான் தெரிந்துகொள்ளவில்லை. நான் எனது துணைபதிவாளர் பதவியின் பொறுப்பு மற்றும் கடமையிலிருந்து தவறியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த எதிரி எந்தவித குற்றச்செயலிலும் ஈடுபடவில்லை என்றும் அவர்மீது தவறாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

V SUNDARARAJ

Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.06.18 18:53:49 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.